## ஏப்ரல் - 10

**"ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (மனத்தாழ்மையாய் இருங்கள்) - 1பேது 5 : 6**

மனத்தாழ்மையின் பாதையில் ஜாக்கிரதையாக அடிவைத்து நடப்பதும், மானிட ஆசைகளைத் தொடர்ந்து அடக்குவதும், பலி முற்றிலுமாக எரிக்கப்படும் மட்டும், அதை பலிபீடத்தின் மேல் வைத்திருப்பதும் உண்மையாகவே எளிதான காரியம் அல்ல, ஆனால், இவ்விதமாக இது இருக்கிறது. அதாவது சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருந்த நமது பாக்கியவானும் முன்னோடியுமான கிறிஸ்துவின் அடிச்சுவடுகளில் நெருக்கமாக அடிவைத்து நடக்கிற உண்மையுள்ள ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற வெகுமதிக்கு, தகுதியற்றவர்களாகாதவாறு கிறிஸ்தவர்களாகிய நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டியவர்களாயிருக்கிறோம். இவ்விதமாக நாம் தாழ்மையுள்ளவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருந்தால், மற்றவர்களுக்குத் தமது நாமத்தை சுமந்து செல்ல கர்த்தர் நம்மை தமது தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்களாக்குகிறார். இவ்விதமாக, நாம் வெறுமையாக்கப்படும் போது, அவர் தமது ஆவியாலும், தமது சத்தியத்தாலும் நம்மை நிரப்பக் கூடும். சிலுவையின் வீரர்களாக, சேனைகளின் கர்த்தரிலும், அவருடைய பலத்த சத்துவத்தின் வல்லமையிலும் பலமுள்ளவர்களாகி, துணிவான வேலை செய்யப் புறப்பட்டுப் போகலாம். **-Z ’93, 7 (R 1486).**

கிறிஸ்து தேவனுடைய பலத்த கையாக இருக்கிறார். அவருக்குள் நாம் இருக்கிறோம். அவருக்குள் மனத்தாழ்மையாய் இருப்பது எதைக் குறிக்கிறது என்றால், சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான, நீதி நடத்தை சம்பந்தமான அல்லது பக்தி சம்பந்தமான காரியங்களில் எதுவாயிருந்தாலும் அதன் சுய மதிப்பிலிருந்து நம்மை வெறுமையாக்கி தேவனின் ஆவியும், வார்த்தையும், பராமரிப்புகளும் நாம் வைத்திருக்க அதிகாரங்கொடுக்கிற அந்த நம்மைப் பற்றிய மதிப்பை நிர்வகிக்க வேண்டும். வேறுபடுகின்ற ஜீவியத்தின் அரங்கங்களின் மத்தியில், யாராகிலும் இவ்விதமாக கிறிஸ்துவுக்குள் மனத்தாழ்மையாய் இருந்தால், குறித்த காலத்தில் கிறிஸ்துவுக்கடியில் தேவனால் உயர்த்தப்படுவான். **-P ’30, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாக் 1:9,10; 4:6; ஏசா 57:15; 66:2; யோபு 22:29; நீதி 15:33; 29:23; தானி 4:37; லூக் 1:52; 10:21; 14:10,11; 18:14; 1பேது 5:3,5; மத் 5:3; 11:29; 18:2-4;20:26,27; 23:12; ரோம 12:3,10,16; 1கொரி 13:4; 2கொரி 12:5-12; எபே 4:2;5:21; பிலி 2:3-11.

**கோபுர வாசிப்பு : Z ’13, 56 (R 5185).**

**வினாக்கள்** : இந்த வசனத்தின்படி இந்த வாரம் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்ன? அவைகளை எவ்வாறு சந்தித்தேன்? அவற்றில் எனக்கு உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? அவை எவற்றில் முடிந்தன?